பக்கங்கள் 19+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | கார்த்திகை 16 வியாழக்கிழமை 05.11.2024 | அதிர்வு 126

## செல்வம் – கஜேந்திரகுமார் இவ்வார இறுதியில் சந்திப்பு



தமிழ் மக்கள் பேரவையால் தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்ட வரைவு மற்றும் தமிழ்த்

02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



CLICK HERE VIDEO

# ‘பார் பெர்மிட்’டுக்களுக்கு பரிந்துரைத்தவர்கள் யார்?

## அதனைத்தான் அம்பலப்படுத்துங்கள் என நாடாளுமன்றத்தில் சாணக்கியன் காட்டம்

கடந்த ஆட்சியின்போது அரசியல் இலஞ்சமாக ‘பார் பெர்மிட்டுகள்’ வழங்கப்பட்ட குற்றச்சாட்டுக் குறித்து இன்று காலையும் நாடாளுமன்றத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் காட்டத்துடன் இடித்துரைத்துக் கேள்வி எழுப்பினார்.

அந்த உரிமங்கள் யார்

02▶

## சுழிபுரம் சந்தியில் விபத்து! பாடசாலை மாணவன் சாவு!!





யாழ்ப்பாணம், சுழிபுரம் சந்தியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து இன்று காலை இடம்பெற்றுள்ளது.

இதன்போது மூளாய் பகுதியைச்

02▶

## வாழைச்சேனை விபத்தில் ஒருவர் பலி; மூவர் காயம்



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, வாழைச்சேனை – பொலனறுவை வீதியிலுள்ள மியான்குளம் பகுதியில் லொறியும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன்

02▶

# பொதுமக்கள் சந்திப்புக்கள் வரும் திங்கள் நடைபெறாது

## வடக்கு ஆளுநர் அறிவிப்பு



எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை வடக்குமாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் பொதுமக்கள் சந்திப்புக்கள் எவையும் இடம்பெறாது என்று ஆளுநரின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

வழமை போன்று எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு மீண்டும் பொதுமக்கள் சந்திப்புக்கள் ஆரம்பமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### 'பார் பெர்மிட்'டுக்களுக்கு...

பெயரில் வழங்கப்பட்டன என்ற பட்டியல் அர்த்தமற்றது, அதற்கு அரசியல் இலஞ்சம் பெறும் நோக்கில் பரிந்துரைத்த அரசியல்வாதிகள் யார், யார் என்பதை அம்பலப்படுத்த வேண்டும் என்ற சாரப்பட அவர் அரசை வற்புறுத்திக் கோரினார்.

அவர் இன்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியபோது குறிப்பிட்டவை வருமாறு:–

"நேற்றைய தினம் (04.12.2024) எனது உரையின்போது 'பார் பெர்மிட்' பெற்றுக் கொண்டமை தொடர்பான தகவல்களை வழங்குமாறு நான் எழுப்பிய கேள்விக்கு அமைய அரச தரப்பின் பிரதம கொறடா நேற்று மாலை அந்த தகவல்களை வெளியிடுவார் எனக் கூறியிருந்தார்.

அதற்கமைவாக ஆளும் கட்சியினுடைய பிரதம கொறடா பிமல் ரத்நாயக்க நேற்று மாலை வேளையில் அப்பட்டியலை வெளியிட்டிருந்தார். அந்தப் பட்டியலில் பார் பெர்மிட் பெற்றுக் கொண்டோருடைய பெயர்கள் மாத்திரம் காணப்பட்டதே வேறு தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

ஆகவே, இவ்வாறான விண்ணப்பங்கள் வருகின்றபோது நாடாளுமன்ற உறுப்பினர்களால் வழங்கப்பட்ட சிபார்சு கடிதங்கள், ஏனைய விண்ணப்ப விடயங்கள் தற்போது எங்கே உள்ளன என்பதைக் கண்டறிவதற்கான விசாரணைகள் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அல்லது குற்றப் புலனாய்வாளர்கள் அல்லது ஜனாதிபதி செயலகத்தால் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பது தொடர்பான தகவல்களை வெளியிட வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மாத்திரம் 18 பார் பெர்மிட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. அங்கு ஒரு இலட்சத்துக்கும் அதிகமான வாக்காளர்கள் காணப்படுகின்றனர். ஆகவே, 5000 வாக்காளர்களுக்கு ஒரு பார் பெர்மிட் எனும் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வழங்கப்பட்டுள்ள பார் பெர்மிட்டுகளை இரத்துச் செய்துள்ளீர்களா, இல்லையா என்பதற்கான பதிலைக் கூறுவதுடன், அவ்வாறு இரத்துச் செய்யாதுவிடின் வழங்கப்பட்ட பார் பெர்மிட்டுகளை உடன் இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பார் பெர்மிட் தொடர்பிலான இந்த கேள்வியை எழுப்புமாறு மக்கள் என்னிடம் கேட்டுக்கொண்டதற்கு இணங்கவே இந்தச் சபையிலே இந்தக் கேள்வியைத் தொடுத்தேன்." – என்றார்.

### வாழைச்சேனை விபத்தில்...

3 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று புதன்கிழமை இரவு இடம்பெற்றது.

ஓட்டோவில் பயணித்த புனானை, ஓமனியாமடு பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுடைய கனகசூரியன் என்பவரே உயிரிழந்தார்.

ஓட்டோவில் பயணித்த புனானை, ஓமனியாமடு பிரதேசத்தைச் சேர்ந்த எம.வினோதன், கணவதிப்பிள்ளை யோஹனா மற்றும் ரிதிதென்னையைச் சேர்ந்த ஓட்டோ சாரதியான உசனார் மஜீதீன் ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

ஹாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த லொறியின் சாரதியைக் கைது செய்த வாழைச்சேனைப் பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### சுழிபுரம் சந்தியில்...

சேர்ந்த மு.சிறிபானுசன் என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

இரண்டு மாணவர்கள் இன்று வியாழக்கிழமை காலை வகுப்புக்காக மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளனர்.

இதன்போது அவர்களது மோட்டார் சைக்கிள் மதிலுடன் மோதி விபத்து சம்பவித்துள்ளது.

வேகக் கட்டுப்பாட்டை இழந்தமையே விபத்துக்குக் காரணம் என்று பெலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது இரண்டு மாணவர்களும் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட வேளை ஒரு மாணவன் உயிரிழந்துள்ளார்.

மற்றைய மாணவன் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்துச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

விபத்தில் உயிரிழந்த மாணவன் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் கணிதப் பிரிவில் கல்வி கற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### செல்வம் - கஜேந்திரகுமார்...

தேசியக் கட்சிகளின் அடுத்தகட்ட நகர்வுகள் குறித்துக் கலந்துரையாடும் நோக்கில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இவ்வார இறுதியில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் செல்வம் அடைக்கலநாதனை மன்னாரில் சந்திக்கவிருக்கின்றார்.

அண்மையில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளை அடுத்து, இனிவருங்காலங்களிலேனும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி ஒன்றுபட்டுப் பயணிக்க வேண்டும் என்ற விடயம் பல்வேறு தரப்பினராலும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

அதன்படி தமிழ் மக்கள் பேரவையால் தயாரிக்கப்பட்ட தீர்வுத்திட்ட முன்மொழிவை அடிப்படையாகக்கொண்டு ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் பேச்சுகளை நடத்துவதற்குத் தாம் தயாராக இருப்பதாக அண்மையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருந்தார்.

அதேவேளை, இது பற்றிக் கருத்து வெளியிட்டிருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் இந்தத் தீர்வுத் திட்ட முன்மொழிவு குறித்தும், அதற்கு அப்பாலும் பேச்சு நடத்துவதற்குத் தாம் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறீதரனை அவரது யாழ். இல்லத்தில் சந்தித்த கஜேந்திரகுமார், புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு உள்வாங்கப்பட வேண்டியதன் அவசியம், அதனை முன்னிறுத்திய அடுத்த கட்ட நடவடிக்கைகள், தமிழ் மக்கள் பேரவையால் தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்ட வரைவு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் சிநேகபூர்வமாகக் கலந்துரையாடினார்.

அதேபோன்று இந்த வார இறுதியிலோ அல்லது எதிர்வரும் திங்கட்கிழமையோ செல்வம் அடைக்கலநாதனை மன்னாரில் சந்திப்பதற்குத் திட்டமிட்டிருக்கும் கஜேந்திரகுமார், அவருடனும் இது பற்றிக் கலந்துரையாடியதன் பின்னர், அடுத்த கட்ட நகர்வுகள் குறித்து தீர்மானிக்கவுள்ளார்.

# அரசியல் கைதிகள் விரைவில் விடுதலை

## நீதி அமைச்சர் உறுதிமொழி



அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கு காலம் தாழ்த்தாது விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார உறுதியளித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் சாணக்கியன் எம்.பி. சுட்டிக்காட்டியபோதே, அவர்கள் விரைவில் விடுவிக்கப்படுவார்கள் என்ற உறுதிமொழியை நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார வழங்கியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் அனைத்து அரசியல் கைதிகளும் விடுவிக்கப்படுவார்கள். அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்ற உறுதிமொழி தேர்தல் விஞ்ஞாபனத்திலும் வழங்கப்பட்டுள்ளது.

புதிய அமைச்சரவை பதவியேற்று ஒரு மாத காலப்பகுதிதான் ஆகின்றது. இருந்தாலும் உரிய சட்டத்தரப்புகளுடன் கலந்துரையாடி, கூடிய விரைவில் அரசியல் கைதிகள், சாட்சிகளின்றி நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்.

இதில் எவ்வித பிரச்சினையும் கிடையாது. அத்துடன், ஊழல்கள், மோசடிகள் தொடர்பிலும், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பந்தமாகவும் நிச்சயம் நடவடிக்கைகள் இடம்பெறும்." – என்றார்.

# வெள்ளத்துக்குள் இருந்து வயோதிபர் சடலமாக மீட்பு

கிளிநொச்சி, பரந்தன் – பூநகரி வீதியில் செல்வபுரம் பகுதியில் வீதியோரமாகத் தேங்கியிருந்த நீருக்குள் இருந்து சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

பூநகரி, பள்ளிக்குடா பகுதியைச் சேர்ந்த செல்லையா கனிஷ்டநாதன் (வயது 69) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக பூநகரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது ஒப்படைக்கப்பட்டது.

# காய்ச்சல் காரணமாக குடும்பஸ்தர் மரணம்!

தொடர்ச்சியாக மூன்று நாள்கள் நிலவிய காய்ச்சலால் காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வடமராட்சி, கெருடாவில் தெற்கு, மண்டபக்காடு பகுதியைச் சேர்ந்த கனகன் சண்முகம் (வயது 62) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

பருத்தித்துறைஆதாரவைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் காலை சேர்க்கப்பட்ட அவர், அன்று பிற்பகலே சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார்.

வல்வெட்டித்துறை பதில் மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா மரண விசாரணைகளை மேற்கொண்டார்.

# வவுனியா பல்கலைக்கழத்தின் தேவைகள் தொடர்பில் ஆளுநருடன் கலந்துரையாடல்





வவுனியா பல்கலைக்கழகம் எதிர்கொள்ளும் சில சவால்கள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுடன் பல்கலைக்கழக துணைவேந்தர் அருளம்பலம் அற்புதராஜா தலைமையிலான குழுவினர் இன்று வியாழக்கிழமை (ஆளுநர் செயலகத்தில் கலந்துரையாடல் நடத்தினர்.

இதன்போது பல்கலைக்கழ மாணவர் விடுதி மற்றும் பல்கலைக்கழக ஊழியர்களுக்கான தங்குமிடம் தொடர்பில் ஆராயப்பட்டது. இவற்றை அமைப்பதற்கான காணிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் ஆளுநருடன் அவர்கள் ஆலோசனை நடத்தினர்.

மேலும், பல்கலைக்கழகத்துக்கான புதிய கட்டடங்களை அமைப்பதற்கான நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு கொடையாளிகளின் உதவியைப் பெற்றுத் தருமாறு ஆளுநரிடம் அவர்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

மேலும், மன்னார் மாவட்டத்தில் தமது பல்கலைக்கழகத்தின் புதிய பீடத்தை ஆரம்பிப்பதற்கான திட்ட முன்மொழிவு தொடர்பிலும் ஆளுநருடன் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பில் வவுனியாப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் நடராஜா ராஜவிசாகன், வவுனியாப் பல்கலைக்கழத்தின் நிர்வாகப் பிரிவின் உதவிப் பதிவாளர் திருமதி தவகிருபா பிரணவமலர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# பருத்தித்துறை நகர சபையின் முன்னாள் உறுப்பினரிடம் 2022 மாவீரர் நினைவேந்தல் குறித்து ரி.ஐ.டி. விசாரணை

2022ஆம் ஆண்டு இடம்பெற்ற மாவீரர் தின நினைவேந்தல் தொடர்பிலும் பருத்தித்துறை நகர சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவரிடம் பயங்கரவாதக் குற்றத் தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்தவரும் பருத்தித்துறை நகர சபையின் முன்னாள் உறுப்பினருமான ப.சுரேஷிடமே நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நான்கு மணி நேரம் இவ்வாறு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரியவருகின்றது.



# உப்பு பாத்திகளையும் விட்டுவைக்காத மழை!

## எதிர்வரும் நாள்களில் உப்பு விலை அதிகரிக்கும்

நாட்டில் எதிர்வரும் நாள்களில் உப்பின் விலை அதிகரிக்கக் கூடும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்து வரும் பண்டிகைக் காலத்தில் உப்புக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதுடன் விலையும் சடுதியாக உயர வாய்ப்புள்ளது என்று உப்பு உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்று அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, இந்த நிலையை தவிர்ப்பதற்காக இந்தியாவில் இருந்து உப்பை விரைவில் இறக்குமதி செய்வது சிறந்து எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ந்து பெய்து வந்த மழை காரணமாக உப்பு உற்பத்தி முடங்கிப் போயுள்ளது என்றும் இதனால் உப்பு உற்பத்தியாளர்கள் கடுமையான சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் எடினவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, உப்பு பாத்திகளில் மழைநீர் தேங்கி நிற்பதால், அதிக அளவு உப்பு கரைந்து நாசமாகியுள்ளது என்றும் உப்பு உற்பத்தியாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.



# ஏறாவூரில் பொலிஸ் சுற்றிவளைப்பில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 8 பேர் கைது!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிசார் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை ஒன்றில் நீதிமன்ற பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட 8 பேரை நேற்று புதன்கிழமை (04) இரவு கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்டத்தில் பல குற்ற செயல்கள் தொடர்பாக கைது செய்யப்பட் ஏறாவூர் பொலிஸ் நிலைய பிரதேசத்தைச் சேர்ந்த பலர் கைது செய்யப்பட்டு அந்தந்த நீதிமன்ற நியாயதிக்க எல்லையிலுள்ள நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்ற பிணையில் வெளிவந்த பின்னர் நீதிமன்றங்களுக்கு ஆஜராகாமல் வந்துள்ளனர். இவர்களுக்கு நீதிமன்ற பிடியாணை பிறப்பித்திருந்தது.

இந்த பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட நிலையில் தலைமறைவாகி வந்தவர்களைத் தேடி கண்டு பிடிக்கும் விசேட சுற்றிவளைப்பு நேற்று இடம்பெற்றது.

இந்தச் சுற்றிவளைப்புத் தேடுதலில் தலைமறைவாகி இருந்த நீதிமன்ற பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட 8 பேரை கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துவருகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.



### 5 கோடி ரூபாவுக்கும் மேல் நிலுவை

# புகையிலைச் செய்கையாளர்களை ஏமாற்றித் தலைமறைவானவர் கைது!

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை பகுதியைச் சேர்ந்த புகையிலையைச் செய்கையாளர்களிடம் புகையிலையைக் கடன் அடிப்படையில் கொள்வனவு செய்து, 5 கோடி ரூபாவுக்கும் மேல் நிலுவை வைத்துவிட்டுத் தலைமறைவான பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணரோஜன் தலைமையிலான குழுவினரிடம் வழங்கப்பட்ட முறைப் பாட்டுக்கு அமைய அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த நபர் வவுனியாவில் தலைமறைவாக இருந்த போது அங்கு வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவருக்கு எதிராக 14 முறைப்பாடுகள் தனித்தனியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சந்தேகநபர் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிமன்றம் சந்தேகநபரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

# சிறுத்தைத் தாக்குதலுக்கு ஆளான பெண் ஒருவர் வைத்தியசாலையில்!

(மஸ்கெலியா)

சிறுத்தை தாக்குதலுக்கு உள்ளான பெண் ஒருவர் பொகவந்தலாவ வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று (05) மதியம் பொகவந்தலாவ தெரேசியா தோட்ட மோரா பிரிவில் இடம்பெற்றுள்ளது.

55 வயது உடைய பெண் ஒருவர் தேயிலை கொழுந்து பறித்துக் கொண்டு இருந்த வேலையில் சிறுத்தை தாக்குதலுக்கு உள்ளான நிலையில் தோட்ட வாகனம் மூலம் பொகவந்தலாவ வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டார்.

இவ்வாறு அனுமதிக்கப்பட்டவர் மாரிாய் (வயது 55) என்பவர் என பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.




# வவுனியாவில் கடுமையான பனி மூட்டம்!

(கி.வசந்தன்)

வவுனியாவில் இன்று அதிகாலை அதிக பனி மூட்டம் காணப்பட்டமையால் வாகன சாரதிகள் போக்குவரத்து செய்வதில் பாரிய சிரமத்தை எதிர்கொண்டனர். நேற்று மாலை கடும் மழை பொழிந் ததன் பின்னர் இன்று காலை அதிக பனி மூட்டம் காணப்பட்டது. அனைத்து பிரதேசங்களும் வெண்மையாக காட்சி அளித்தன.

இதனால் வீதி போக்குவரத்தில் ஈடுபட்ட சாரதிகள் கடும் சிரமத்தை எதிர்கொண்டனர். மின் குமிழ்களை ஒளிர விட்டு வாகனங்களில் பயணித்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தொழுநோய் ஆபத்து

நாட்டில் தொழுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதான அதிர்ச்சித் தகவலை தொழுநோய் கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் நிரூபா பல்லேவத்த வெளியிட்டுள்ளார்.

நாட்டில் இவ்வருடத்தின் முதல் 10 மாதங்களில் 1,084 தொழுநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதிக எண்ணிக்கையான தொழுநோயாளர்கள் கொழும்பு மாவட்டத்திலிருந்து பதிவாகியுள்ளனர். அவர்களின் மொத்த எண்ணிக்கை 115 ஆகும். கம்பஹா மாவட்டத்திலிருந்து 113 தொழுநோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

நாட்டில் கடந்த 2023 ஆம் ஆண்டில் 1,500 தொழுநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர் என முந்திய புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் தொழுநோயின் தாக்கம் அதிகரித்துள்ளதுடன், தற்போது மக்கள் மத்தியில் தொழுநோய்த் தொற்று விவகாரம் பாரிய அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

இலங்கையில் கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் தொழுநோயாளிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ள அதேசமயம், சிறுவர்களிடையே தொழுநோய் பரவ ஆரம்பித்திருப்பதாக தொழுநோய்க் கட்டுப்பாட்டு பிரிவு வட்டாரங்கள் எச்சரிக்கின்றன.

சிறுவர்களிடையே தொழுநோய் அதிகளவில் பரவும் முதல் ஐந்து நாடுகளில் இலங்கையும் ஒன்று என்பது அதிர்ச்சி தரும் புள்ளி விவரமாகும்.

மைக்ரோ பாக்டீரியம் லெப்ரே என்ற பாக்டீரியாவால் உண்டாகும் ஒரு தொற்று நோயே தொழுநோய் (Leprosy). இந்த பாக்டீரியா மிக மெதுவாக பெருகுவதால் நோய்த் தொற்று ஏற்பட்டு குறைந்தது 5 அல்லது 6 ஆண்டுகளுக்கு பிறகே நோயின் அறிகுறிகள் தோன்றும். இந்த நோய், தோல், நரம்பு, மேல் மூச்சு மண்டலத்தை பாதிக்கும்.

இந்த பாக்டீரியம் வெப்பமண்டலப் பகுதிகளில் காணப்படுவது. இதுவே தொழுநோயை உண்டாக்குகிறது. அளவிலும் வடிவிலும் இது காசநோயை உண்டாக்கும் நுண்ணுயிரி போன்றதே.

சிகிச்சை பெறாத நோயாளியின் பிரசன்னமே நோய் பரவலுக்கு காரணம். தொழுநோயாளியின் உடலில் இருந்து நோய் கிருமி பரவும் முக்கிய வழி சுவாச மண்டலம். சிகிச்சை பெறாத தொழுநோயாளிகளிடம் தொடர்ந்து தொடர்பு இருக்கும்போது நோய் உண்டாகும். இந்த பாக்டீரியா மூக்கு அல்லது வாய் வழியாக சுவாச மண்டலத்துக்குள் நுழைகிறது. பின்பு அவை நரம்புகள் மற்றும் தோலை அடைகின்றன. பொதுவாக நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களை இந்நோய் அதிகம் தாக்குகின்றது.

வெளிறிய தோல் திட்டுக்கள், தோல் திட்டுகளில் உணர்வு குறைவு அல்லது இழப்பு, கை அல்லது காலில் உணர்வின்மை, கால், கைகளில் காயம் அல்லது தீப்புண்(உணர்வின்மை காரணமாக சூடு அறியாமை), முகம் அல்லது காது மடலில் வீக்கம் என்பன நோய் ஆரம்ப அறிகுறிகள்.

தொழுநோய் அறிகுறிகள் தென்பட்டால் அருகில் உள்ள தோல் மருத்துவரை அணுக வேண்டும். தொழுநோய்க்கு மருந்து உண்டு. தொழுநோயை ஒரு தனி மருந்தால் குணப்படுத்த முடியாது. பல மருந்துகளின் கூட்டு சிகிச்சை அல்லது தொழுநோய் பன்மருந்து சிகிச்சையால் குணப்படுத்த முடியும். தொடர்ந்து பன்மருந்து சிகிச்சை மேற்கொள்ளும் போது நோய் முற்றிலுமாக குணப்படுத்தப்பட்டு ஊனங்கள் தவிர்க்கப்பட்டு, நோய் பரவலும் தடுக்கப்படுகிறது.

உலக தொழுநோய் தினம் ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி இறுதி ஞாயிறு கடைப்பிடிக்கப்படுகிறது. ஊனமாக்கும் தொழுநோயை விரைவில் ஒழிக்க தீவிர முயற்சிகளையும் புதிய உறுதியையும் மேற்கொள்ள இந்த தினம் உதவுகிறது.

தொழுநோய் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த – அதன் நோய் அறிகுறிகளை பற்றி மக்கள் அறிய – தகுந்த சிகிச்சை எடுத்து கொண்டால் தொழுநோயைக் குணப்படுத்த முடியும் என்பதை மக்களுக்கு அறியப்படுத்த – தொழுநோய் பற்றிய மோசமான, தவறான எண்ணங்களை விலக்க – இத்தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது.

தகுந்த முன்முயற்சிகளை திட்டமிடப்பட்ட ரீதியில் வகுத்து தொழுநோய் அரக்கனை முற்றாக ஒழிக்க சமூக மட்டத்தில் கூட்டு முயற்சிகள் அவசியம்.



# நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா வெள்ளம் பாதித்த மக்களுக்கு உதவி

(த.சுபேசன்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கொடிகாமம் பகுதியில் வெள்ளம் சூழ்ந்து வீடுகளை விட்டு வெளியேற முடியாத மக்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா உலருணவுப் பொருட்களை வழங்கியுள்ளார்.

புலம்பெயர் உறவுகளின் நிதிப் பங்களிப்பில் இந்த உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதில் பிரதேச இளைஞர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# மதில் இடிந்து வீழ்ந்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

வீட்டை சுற்றி கட்டப்பட்டிருந்த மதிலின் ஒரு பகுதி இடிந்து விழுந்ததில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பண்டாரகம ரைகம, பிரதேசத்தை சேர்ந்தவரே உயிரிழந்துள்ளார் என்று வெலிக்கடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் பிறந்த நாளான கடந்த 2 ஆம் திகதி இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் ஸ்ரீ ஜயவர்தனபுர, நாடாளுமன்ற வீதியில், கும்புக்கஹதுவ பகுதியில் உள்ள வீடொன்றின் பழைய மதிலை அவரது மகனுடன் சேர்ந்து அகற்றியுள்ளனர்.

பின்னர் புதிய மதிலை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர். இதன் போது இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.



இதன் போது உயிரிழந்த நபரின் மகன் கடை ஒன்றுக்குச் சென்றிருந்த நிலையில் மதிலின் மீதமிருந்த பகுதியை தந்தை தனித்து அகற்றிய போது அது இடிந்து விழுந்துள்ளது. இதில் அந்த நபர் அதன் அடியில் சிக்கியதாகவும் இதனால் மரணம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.






# சரியான உதவிகள் எதுவுமின்றி அவலப்படும் பெருந்தோட்ட மக்கள்

**ஸ்ரீ நிவாசகம் இரவீந்திரன்**

இரத்தினபுரி மாவட்டம் இனவாதத்துக்குப் பெயர் பெற்ற இடமாகும். கடந்த காலங்களில் இம்மாவட்டத்தில் பெருந்தோட்ட மக்கள் அவ்வப்போது பெரும்பான்மையின மக்களால் தாக்கப்படுவது வழமையான சம்பவங்களின் ஒன்றாக இருந்தது. சிறு சம்பவங்களுக்கு கூட பெரும் பான்மையின மக்கள் தோட்ட குடியிருப்புக்களுக்கு புகுந்து அப்பாவி தோட்ட மக்களை மட்டுமல்லாமல் அவர்களின் குடியிருப்புக்களையும் தாக்குதல் நடத்து வார்கள்.

வடகிழக்கில் யுத்தம் நடைபெற்ற காலத்தில் அதன் பிரதிபலிப்புகள் இரத்தினபுரி மாவட்டத்தில் அளவுக்கதிக மாகக் காணப்பட்டன. இதன் காரணமாக, இம்மாவட்டத்திலுள்ள தோட்ட மக்கள் சொல்லொனா துயரங்களை அக்காலத்தில் அனுபவித்து வந்தனர். குறிப்பாக எஹேலிய கொடை பொம்பேகம தோட்டம், இரத்தினபுரி ஹப்புகஸ் தென்ன, வேவல்வத்தை தோட்டம், ஆகர்ஸ்ட்லேண்ட் தோட்டம், நிவித்திகலை பின்கந்த தோட்டம், தேல கிரிபத்கலை தோட்டம், இறக்குவானை சூரியகந்த தோட்டம் உள்ளிட்ட பல தோட்டங்களிலுள்ள தோட்ட மக்கள் தமது உடமைகளையும் உயிர்களையும் இழந்தனர் என்பது வரலாற்று உண்மையாகும்.

இதனால் இம்மாவட்ட தோட்ட மக்கள் இன்றும் கூட ஒரு வித அச்ச உணர்வுடன் தான் வாழ்ந்து வருகின்றனர். இ,ன்றும் கூட இம்மாவட்ட தமிழ் மக்கள் குறிப்பாக தோட்ட மக்கள். தமது தேவை கருதி அரச திணைக்களங்கள் மற்றும் அரசியல் தலைவர்கள், அமைச்சர்கள், பிரதிய மைச்சர்கள் போன்றோரை அணுகுவது மிகவும் குறை வாகும் அவ்வாறு அணுகினால் கூட அவர்களுக்கு நியாயமான தீர்வுகள் கிடைக்காது. அல்லது கோரிக்கைகள் இழுத்தடிப்பு செய்யப்படும் என்று அவர்கள் கவலை வெளியிடுகின்றனர்.

வெள்ளம் மற்றும் மண்சரிவு உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களின் போது பாதிக்கப்படும் தோட்ட மக்க ளுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான நிவாரணங்கள் மற்றும் உதவிகள் கூட முறையாக கிடைக்கப்பெறுவ தில்லை. இவ்வாறு பாதிக்கப்படும் தோட்ட மக்களுக்கு தோட்ட நிர்வாகங்கள் அல்லது பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிறுவகமான ட்ரஸ்ட் நிறுவனம் உதவி வழங்கும் என்று அரச நிறுவனங்கள் கூறும். அதே வேளை தோட்ட நிர்வாகங்கள் பிரதேச செயலகத்தின் ஊடாக நிவாரணங்கள் வழங்கப்படும் என்று கூறி வருவதால் பாதிக்கப்பட்ட தோட்ட மக்கள் செய்வறியாது அங்கலாய்க்கின்றனர். இது கடந்த பல தசாப்தங்களாக இடம் பெற்று வரும் விடயமாகும்.

ஆனால் இதே இயற்கை அனர்த்தங்களால் பாதிக் கப்பட்ட பெரும்பான்மையின மக்களுக்கு அரச நிறுவனங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் போட்டி போட்டுக்கொண்டு உதவி செய்வதுடன் புதிய காணி, புதிய வீடு என்பன பெற்றுக்கொடுக்கின்றன.

அண்மையில் இரத்தினபுரி மாவட்டத்தில் பெய்த காற்றுடன் கூடிய கடும் மழை காரணமாக காவத்தை எந்தான கீழ் பிரிவு தோட்டத்தில் பாரிய அரச மரம் ஒன்று வீழ்ந்து தோட்ட தொழிலாளர்களின் தொடர் குடியிருப்புக்கள் பாதிக்கப்பட்டன. இதில் ஒரு குடும்பத்தின் குடியிருப்பு முற்றாக சேதமடைந்தது. தோட்ட நிர்வாகம் வருகை தந்து பார்த்ததுடன் குடியிருப்பின் மீது வீழ்ந்த மரத்தை துண்டு துண்டாக வெட்டி தமது முற்றத்திலேயே போட்டு விட்டு சென்றனர். அதன் பிறகு அவர்கள் இது குறித்து எவ்விதமான அக்கறையும் கொள்ளவில்லை. பாரிய மரக்குற்றிகளை அப்புறப்படுத்த முடியாதுள்ளது என்று பாதிக்கப்பட்ட குடும்பத்தை சேர்ந்த 3 மாத குழந்தையின் தந்தையான தேவரட்னம் அனுசான் (வயது 24) கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச மரம் வீழ்ந்த பின்னர் தோட்ட நிர்வாகம் மரத்தை முழுமையாக அப்புறப்படுத்தவில்லை . இது குறித்து தோட்ட நிர்வாகத்திடம் வினவிய போது நீங்கள் தோட்டத் தில் வேலை செய்யாத தொழிலாளர்கள் அதனால் வீட்டு முற்றத்திலுள்ள மரக்குற்றிகளை நீங்கள் தான் அப்புறப்படுத்திக் கொள்ள வேண்டும் . அத்துடன் உங்களுக்கு மாற்று வீட்டையோ மாற்றுக் காணியையோ எங்களால் தர முடியாது என்று கூறியுள்ளனர்.

இதனால் நானும் எனது மனைவி மற்றும் எங்கள் குழந்தை (3 மாதம்) எனது தம்பி, அவரது மனைவி, குழந்தை (2 மாதம்) உள்ளிட்ட 6 பேரும் எமது உறவினர் வீட்டிலேயே தங்கி வருகின்றோம்.

கிராம சேவகர் ஊடாக காவத்தை பிரதேச செயலத்திடம் அறிவித்த போது 3600 ரூபா மட்டுமே வழங்கினார்கள் அதன் பின்னர் எவ்விதமான உதவிகளும் கிடைக்க வில்லை. அரசியல்வாதிகள் வருகை தந்து பார்க்கின்றனர். ஆனால் எவ்விதமான உதவிகளும் கிடைக்கப்பெறு வதில்லை . தோட்டத்தில் வேலை செய்பவர்களுக்கு மட்டும் தான் தோட்ட நிர்வாகங்கள் நிவாரணம் வழங்கும் என்றால் படித்து அரச தொழில் கிடைக்காமல் தோட்டத்தில் வசிக்கும் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் இயற்கை அனாத்தங்களில் பாதிக்கப்பட்டால் யாரிடம்

தொடர்ச்சி ▼

# சரியான உதவிகள் எதுவுமின்றி அவலப்படும் பெருந்தோட்ட மக்கள்



தொடர்ச்சி▲

போய் நிவாரணம் பெறுவது? அல்லது தோட்ட தொழிலாளர்களின் பிள்ளைகள் படிக்காமல் தோட்டத்தில் தொழிலாளர்களாக வேலை செய்ய வேண்டுமா? என்று வினாவெழுப்பினார்.

இது குறித்து மலையக மக்கள் முன்னணியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் மூக்கன் சந்திரகுமார் கருத்து தெரிவிக்கையில்,

பாதிக்கபட்ட மக்களை நேரடியாக போய் பார்த்தேன். 24 குயிருப்புக்களை கொண்ட தோட்ட லயன் தொடர் வீட்டில் ஒரு குடியிருப்பு மீது 40 வருட பழைய அரம மரம் ஒன்று வீழ்ந்து அக்குடியிருப்பு முற்றாக சேதமடைந்துள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச அல்லது தோட்ட நிர்வாகம் உடனடி நிவாரணம் மற்றும் புதிய வீடுகளை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றார்.

இதே போன்று எந்தான மேற்பிரிவிலும் ஒரு மரம் குடியிருப்பு மீது வீழ்ந்து 3 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கும் உரிய நிவாரணங்கள் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றார்.

இது குறித்து புதிய அரசின் புதிய பிரதியமைச்சர் எஸ்.பிரதீப் பாதிக்கப்பட்ட மக்களை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி நிவாரணம் பெற்றுக்கொடுக்கப்படும் என்றார்.

பாதிக்கப்பட்ட தோட்ட தொழிலாளி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் இயற்கை அனாத்தங்களால் மற்றும் பெரும்பான்மையின மக்களால் தாக்கப்படும் போது பாதிக்கப்பட்டால் தோட்ட மக்கள் மலையக அமைச்சர் ஒருவரை தேடி கொழும்பு அல்லது மலையகத்துக்குக் குறிப்பாகக் ஹட்டனுக்குச் செல்ல வேண்டும். ஆனால் புதிய அரசின் புதிய பிரதி அமைச்சர் இரத்தினபுரி மாவட்டத்தில் இருப்பதால் அவர் எமக்கு நிவாரணம் பெற்று தருவார் என நம்புகிறேன் என்றார்.

பொறுத்திருந்து பார்ப்போம் காலம் தான் எதற்கும் பதில் சொல்லும். ஏனெனில் இரத்தினபுரி வாழ் தோட்ட மக்கள் அரசியல்வாதிகளின் வாக்குறுதிகளை அவ்வளவாக நம்புவதில்லை. அத்துடன் கடந்த கால அரசுகளின் மலையக அமைச்சர்கள் மலையக மக்களுக்கு மட்டுமே தமது அமைச்சினூடாக கூடுதல் சேவை செய்தார்கள். ஆனால் இன்றைய அரசு சகலருக்கும் சம உரிமை சம அந்தஸ்து என்று பறைசாற்றி வருகின்றது.

இதனால் மலையக மக்களுக்கென வழங்கப்பட்டுள்ள அமைச்சின் ஊடாக மலையக மக்கள் முழுமையான பயனை பெற முடியுமா என்பது தெரியாதுள்ளது என்றார்.

# அகில இலங்கை 'கிக்பொக்சிங்'; வெலம்பொடை மாணவன் தங்கம்!

நாவலப்பிட்டிய ஜயதிலக்க விளையாட்டரங்கில் நடைபெற்ற அகில இங்கை கிக்பொக்சிங் போட்டித் தொடரில் 12 வயதுக்கு உட்பட்ட பிரிவில் எம்.என். நபீர் அஹமட் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

வெலம்பொடை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தரம் 6 இல் கல்வி பயிலும் இந்த மாணவர் வெலம்பொடையைச் சேர்ந்த எம். என். நலீம், எஸ்.ஏ.நசீரா தம்பதியினரின் புதல்வராவார்.

இந்த வருடம் தங்கப் பதக்கம் வென்ற இந்த மாணவர் கடந்த வருடமும் அதற்கு முன்னைய வருடமும் நடந்த போட்டிகளில் முறையே தங்கப் பதக்கம், வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தார்.

கம்பளையைச் சேர்நத டி.ஆ. நவ்ஷாத் இந்த மாணவரின் பயிற்றுப்பாளராவார்.







# கைதடி ஆயுள்வேத ஆஸ்பத்திரி முன்பாக மரம் நடுகை திட்டம்

(த.சுபேசன்)

விதைப்பதும் முளைப்பதும் கார்த்திகையில் எனும் தொனிப்பொருளில் அண்மையில் கைதடி ஆயுள்வேத மருத்துவமனை முன்பாக மரநடுகைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பசுந்தேசம் அமைப்பும் இயற்கையின் நண்பர்கள் இயக்கமும் இணைந்து நடத்திய மரநடுகை நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டு வைத்திருந்தார்.

நிகழ்வில் பொதுமக்கள், மக்கள் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.






# மொட்டுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் கொட்டிகாவத்தை வீட்டில் வைத்துக் கைது

## மாவீரர் நினைவேந்தல் பற்றி பொய்ப் பிரசாரம் செய்தாராம்

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நிர்வாகச் செயலாளர் ரேணுகா பெரேரா குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இன்று காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

வடக்கில் அனுஷ்டிக்கப்பட்ட மாவீரர் நாள் நினைவேந்தல் தொடர்பில் சமூக ஊடகங்களில் பொய்யான தகவல்களை பரப்பியமைக்காகவே அவர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.


ரேணுகா பெரேரா கொட்டிகாவத்தையில் உள்ள அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.



இதேவேளை வடக்கில் 244 நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன எனவும் அவற்றில் பத்தில் சில சின்னங்கள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் அறிவித்துள்ளனர் எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் வடக்கில் மாவீரர் தின வைபவங்கள் நடைபெற்றன என சமூக வலைத்தளங்கள் ஊடாக பிரசாரம் செய்யப்பட்டு வரும் காணொளிகள் கடந்த காலங்களில் வெளிநாடுகளில் நடைபெற்ற வைபவங்களின் படங்கள் மற்றும் காணொளிகள் எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555





# சுன்னாகம் ரோட்டரிக் கழகம் வெள்ளம் பாதித்த மக்களுக்கு உதவி

யாழ். மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகம் ஊடாக உணவுப் பொதி உள்ளிட்ட உதவித் திட்டங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதன்போது தென்மராட்சியின் வெள்ளாம்போக்கட்டி மற்றும் மட்டுவிலைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொழும்பு நகர் மைய ரோட்டரிக் கழகத்தின் நிதிப் பங்களிப் போடும் இளவாலை,மானிப்பாய் மற்றும் சண்டிலிப்பாய் பகுதி மக்களுக்கு ரோட்டேரியன் சாந்தலதாவின் நிதிப் பங்களிப்பிலும் உதவித்திட்டங்கள் வழங்கி வைக்கப்பட்டன.




## ஹலிமாஸ் பாத்
### ( ஹலிமாவின் வழி )

(2012, பொஸ்னியா, 100 நிமிடங்கள்)

நெறியாளர்: அர்சன் அன்ரன் ஒஸ்ரோஜிக்

08. 12. 2024, ஞாயிறு

4.00 மணி

தந்தை செல்வா கலையரங்கு,
யாழ்ப்பாணம்.

**அனுமதி இலவசம் !!!**




இன. மத முரண்பாடுகளால் மனிதம் நசுங்குறுவதைச் சித்திரிக்கும் – உண்மை நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்ட பொஸ்னியத் திரைப்படம்;திரைப்பட விழாக்கள் பலவற்றில் விருதுகளையும் பெற்றது!

**யாழ்ப்பாணத் திரைப்படக் கழகம்**

# தொலைக்காட்சியும் இளைஞர்களும்!

**அம்சன் கிருஷ்ணா**
**ஊடகத்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**



மனிதன் இவ்வுலகில் வாழ்வதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் அழகான முறையில் அமைத்துள்ளான். இன்றைய உலகம் முன்னேற்றப் பாதையில் வீறுநடை போட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த அடிப்படையில் மின்னணு சாதனங்கள் அவசிய தேவையாகி விட்டது. முந்தைய காலத்தில் யோசித்து பாத்திராத எத்தனையோ படைப்புக்கள் இன்றைக்கு சர்வசாதரணமாக பயன்படுத்தப்படுகிறது. முன்ன ரெல்லாம் வெளியூருக்கு சென்றவர்களிடத்திலிருந்து தகவல். பெறுவதற்கே வெகு நாள்களாகும். ஆனால் இன்று கைபேசிகளும் தொலைபேசிகளும் நம்முடைய வாழ்க்கையை புரட்டி போட்டுவிட்டன. அத்தகைய அன்றாட அறிவியல் கண்டுபிடிப்பில் ஒன்று தான் நம் வீடுகளில் அன்றாட அவசிய தேவையாக கருதப்படு கின்றது. தொலைக்காட்சியாகும்.

புது வீடு கட்டி வீட்டு சாதனங்கள் வாங்கும் பொழுது தொலைக் காட்சிப் பெட்டியும் முக்கிய இடத்தைப் பிடித திருக்கின்றது. இதன் இன்றைய அதிவேக வளர்ச்சியின் முக்கிய காரணம் மனிதனின் தகவலறியும் தாகமும், பொழுது போக்கும் சித்தனையுமாகும்.

தொலைக்காட்சியை பார்க்கும் போது பல் வேறு விடயங்கள் உள்ளடங்கலாக தொடர்பாடலை ஏற்படுத் துகின்றன. அவையாவன, செய்திகள், விளம்பரங்கள், தொடர் நாடகங்கள், திரைப்படங்கள், யதார்த்தம் சார் நிகழ்ச்சிகள் பட்டிமன்ற விவாதங்கள், இசை, ஏனைய நிகழ்வுகள் என பல தரப்பட்ட நிகழ்ச்சிகள் குவிந்து போய் கிடக்கின்றன என்றே கூறலாம்.

உலகில் எந்த மூலையிலும் ஒரு சம்பவம் நிகழும் போது அதனை அப்படியே நேரடியாக உடனடியாக நம் கண்களுக்கு கொண்டு வரும் சாதனம் தொலைக் காட்சி. தத்ரூபமாகவும் மிகைப்படுத்தாமலும் காட்டக் கூடிய மகிமையும் சிறப்பும் தொலைக்காட்சிக்கு உண்டு. 1922 ஆம் ஆண்டில் வானொலி உலகுக்குக் கிடைத்த போது ஒரு பெட்டியில் குரலைக் கேட்க முடியுமா? என்று அதிசயித்த உலகம் அடுத்த நான்கே ஆண்டு களில் ஒரு பெட்டியில் குரலைக் கேட்பதோடு உருவங்களையும் பார்க்க முடியும் என்பதை கற்பனை செய்து கூட பார்த்திருக்காது. ஆனால் கற்பனை செய் பவர்கள் தானே கண்டு பிடிப்புகளையும் செய்கின்றார்கள். ஒரு பெட்டிக்குள் ஒலியையும், ஒளியையும் காட்ட வேண்டும் என்ற கற்பனை செய்து கனவு கண்டு தொலைக்காட்சி என்ற உன்னத சாதனத்தை உலகுக்கித் தந்தவர் ஜான் லோகி பேர்ட். வலினாலியின் தந்தை மார்க்கோனி.

தொலைக் காட்சியின் தந்தை ஜான் லோகி பேர்ட் 1888 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி ஸ்கொட்லாந்தின் கிளாங்கோ நகருக்கு அருகில் ஹலன்ஸ் பேர்க் என்ற இடத்தில் பிறந்தார். ஜான் யோகி பேர்ட் நான்கு பிள்ளைகளில் அவர்தான் கடைக்குட்டி. இவருடைய 20 வருட உழைப்புக்குப் பிறகு அதாவது 1925 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 2 ஆம் திகதி உலகுக்கு தொலைக் காட்சி கிடைத்த நாள். அறிவியல் முன்னேற்றத்தின் அடையாளம் எனலாம்.

ஐக்கிய நாடுகள் சபையால் 1996 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 21 ஆம் திகதி உலக தொலைக் காட்சி தனமாக அங்கீகரிக்கப்பட்டு, கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. தகவல்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதன் மூலம் சமூகத்தில் தெலைக் காட்சியின் முக்கியத்தையும் தாக்கத்தையும் முதன்மை படுத்தும் வகையில் இந்நாள் கொண்டாடப்பட்டு வருகுன்றது.

நமது ஓட்டுமொத்த வாழ்விலும் நிரம்பி வழிவது தொலைக் காட்சிகளின் பிம்பங்கள் தான்.

90களின் இறுதியில்தான் கிராமங்களை எல்லாம் தொலைக்காட்சிகள் தொட ஆரம்பித்தன. அந்த காலகட் டத்தில் தமிழகத்தைப் பொறுத்தவரை துர்தர்சன் அலை வரிசை மட்டும் தான். அதற்கும் ஆண்டனாவை அங்கு மிங்குமாக திருப்பிய படியே இருக்க வேண்டும். ஒளியும் ஒலியும் சக்திமான், மகா பாரதம், ராமாயணம் என தூதர்சனின் ஆல்தான தொடர்களும், சச்சின் டெண் டுல்கர், அசார், கங்குலி போன்ற வீரர்கள் செய்யும் கிரிக்கெட்டும் அந்த காலத்தை கடந்தவர்களால் மறக்க முடியாது. இப்போதைய பொது குடிநீர் தொட்டிகளைப் போல, அந்த காலகட்டத்தில் ஒவ்வொரு ஊரின் மையத்திலும் பொது தொலைக் காட்சி பெட்டியும், அதற்கு என பிரத்யோகமான அறையும் அதனை இயக்குவதற்கு ஒரு ஓபரேட்டரும் இருப்பார்கள். அவர்கள் தான் மாலைப்பொழுதில் "தூதர்சன்" மட்டுமே ஒளிபரப்பாகும். இந்தத் தொலைக்காட்சியை ஒன்ரூசூ39 செய்வார்கள்.

செய்திகள் பொழுது போக்கு, விளையாட்டு என அனைத்துக்குமே அந்த தொலைக்காட்சிதான் பொது தொலைக் காட்சி பொடி அறையின் முன்னே மாலைப் பொழுதுகளில் மக்கள் கூட்டம் அலை மோதும். அப்படித்தான் தமிழகத்தில் 90 களில் தொலைக்காட்சி அறிமுகமானது. இதனை தொடர்ந்து இலங்கையின் தொலைக் காட்சி அறிமுகத்தைப் பற்றி உற்று நோக் கலாம். 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி இலங்கையில் தோற்றம் பெற்ற தொலைக் காட்சி அலைவரிசை இன்றுவரை தனது தொடர்ச்சியான சேவையை பன்முகப்பட்ட வகையில் வழங்கி வந்திருக் கின்றது. அதனிடையே ஏராளமாள தொலைக்காட்சி அலைவரிசைகளை இலங்கையில் தோற்றம் பெற்று விட்டன. அதே போன்று சில அலைவரிசைகள் தோன்றி மறைந்தும் விட்டன. இவற்றை அரச அலைவரிசைகள், தனியார் அலைவரிசைகள் என பகுத்து கூறலாம். ரூபவாகினி, ஐ, நேத்ரா, என் ரிவி, ஐ ரிவி, வசந்தம் ஆகிய ஆறும் அரச அலைவரிசைகள ஆகும். முறையே முதல் நான்கும் ரூபவாகினி கூட்டுத் தாபன நிர்வாகத்தின் கீழும் மற்றைய இரண்டும் சுயாதீன தொலைக்காட்சி நிறுவன நிர்வாகத்தின் கீழும் பணியாற்றுகின்றன. இவற்றில் ரூபவாகினி, ஐ ஆகியவை ஆரம்ப காலத்தி லும் நேத்ரா, வசந்தம் ஆகியவை பிற்காலத்திலும் நிகழ்சிகளையும் ஒளிபரப்பாக்கியுள்ளன. என் ரிவி அலைவரிசை நிறுத்தப்பட்டுள்ளது. சிரச, ரி. என். எல்., சுவர்ணவாகினி, சி. என்.என்., ஈ.ரி.வி., ஏ.ஆர்.வி., தெரண, மாக்ஷ் ரி.வி. என இலங்கையில் 17 இற்கும் மேற்பட்ட தனியார் அலைவரிசைகள் இன்று சேவையில்

**தொடர்ச்சி ▼**

# தொலைக்காட்சியும்....

தொடர்ச்சி▲

உள்ளன.

ஆரம்பத்தில் இருந்ததொலைக்காட்சில் இருந்து தற்போது சிமாட் ரிவி என்றும் தொலைக்காட்சி விதம் விதமாக தற்போது அனைவரது பாவனையிலும் கையாளப்பட்டு வருவது தொலைக்காட்சியின் முன்னேற்றமாகும். இத்தொலைக் காட்சியை கையாள்பவர்களாக உலகில் பல தரப்பினர் காணப்படுகின்றனர். அதனை நாம் சிறுவர்கள் முதல் பெரியவர்கள்வரை என்று குறிப்பிடுவது வழக்கம். குறிப்பாக தொலைக்காட்சியினூடாக அதிகளவு ஊடாட்டம் இளைஞர்களிடையே காணப்படுகின்றது. அவர்கள் பல தரப்பட்ட தமது பிரத்தியேக தேவைகளுக்காகப் பயன்படுத்தி வருகின்றனர். அத்தகைய தொலைக்காட்சி மற்றும் இளைஞர்களுக்கான தொடர்பாடல் செயன்முறையை பின்வருமாறு ஆராயலாம்.

ஆய்வொன்றின் படி அதிக இளைஞர்கள் தொலைக்காட்சி யோடே தமது பொழுதைக் கழிப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன. தொலைக்காட்சியில் வரும் திரைப் படங்கள், விளம்பரங்கள், இசை, நெடுந்தொடர்கள், விளையாட்டுக்கள் என பல நிகழ்ச்சிகள் இளைஞர்களிடையே கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. இளைஞர் வயதுக் குழுவுக்கு உலகளவில் ஒப்புக்கொள்ளப்பட்ட சர்வதேச வரையறை எதுவும் இல்லை.

இருப்பினும் புள்ளிவிவர நோக்கங்களுக்காக, ஐக்கிய நாடுகள் சபை உறுப்பின நாடுகளால் செய்யப்பட்ட வரைறையின்படி 15 இல் இருந்து 24 வயதுக்கு இடைப்பட்ட நபர்களே இளைஞர்கள் என வரையறுக்கப்படுகின்றது.

### இளைஞர்கள் தொலைக் காட்சியை நாடுவதற்கான நோக்கங்கள்

இளைஞர்கள் எதற்காக தொலைக் காட்சியை பெரிதும் நாடுகின்றனர்? என்ற வினா அனைவரதும் மனதிலும் எழலாம். அவர்கள் இதனை நாடுவதற்கான காரணங்கள் பின்வருமாறு நோக்கலாம். உலகில் நவநாகரிக இளைஞர்களின் கனவு என்னவாக இருக்கும்? ஸ்டைலான உடை, விலை உயர்ந்த ஸ்மார்ட் போன்கள், கண்ணைக் கவரும் இருசக்கர வாகனங்கள் போன்றவையாகத்தான் இருக்கும்.

இதனைத்தான் தற்போதைய இளைஞர்கள் அதிகம் விரும்புகிறார்கள். தொலைக்காட்சியில் அதிகம் ஒளிபரப்பப்படும் விளம்பரங்களோ, திரைப்படங்களோ, இளைஞர்களை கவரக் கூடிய வகையில் அவர்களை வைத்து இத்தகைய விடயங்களை மேற்கொள்கின்றனர். இலங்கை அலைவரிசைகளை விட அதிகம் தமிழர்களாகிய நாம் அதிகம் தென்னிந்திய அலைவரிசைகளை நாடுகிறோம். அவற்றுக்கு அடிமைப்பட்ட தனம் என்று கூடவே கூறலாம். உதாரணமாக சண் ரிவி, விஜய் ரிவி, சீ தமிழ், கலைஞர், ஜெயா ரிவி ஆகிய முதன்மை சனல்களைக் குறிப்பிடலாம். இவை அதிகம் இளைஞர்களை கவரக் கூடிய விதத்தில் தமது நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி வருகின்றன.

இந்திய இளைஞர்கள் எப்படி இருக்கின்றார்கள்? என்ன விரும்புகிறார்கள்? அவர்களின் எதிர்பார்ப்புக்கள் என்ன என்பது பற்றி டில்லியை சேர்ந்த ஆய்வு நிறுவனம் ஒன்று ஆய்வு ஒன்று நடத்தியுள்ளது.

அதற்கு இளைஞர்கள் அளித்த பதில்கள் அவர்கள் மீதான பிம்பத்தை மெய்ப்பிக்கும் விதமாகவே இருக்கின்றன. மிகவும் ஆடம்பரமான வகையிலான உடைகளை அணிவதே தங்களின் விருப்பம்என 61 சதவீத இளைஞர்கள் ஆய்வில் தெரிவித்துள்ளனர். புதிய மாடல் ஸ்மாா்ட் போன்களை வாங்க வேண்டும் என்பது 59 வீதமான இளைஞர்களின் விருப்பமாக இருக்கின்றது.

2007 ஆம் ஆண்டு 34 சதவீத இளைஞர்களிடம் மொபைல் போன் இருந்த நிலை மாறி தற்போது 81 சதவீத பேரிடம் ஸ்மார்ட் போன் விளையாடுகின்றது என்று தெரிவிக்கின்றது. இந்த ஆய்வு முடிவு சிகப்பழகு தருவதாக விளம்பரம் செய்யப்படும் கிறீம்களின் மீது 39 சதவீதம் பேர் ஆர்வம் தெரிவித்துள்ளனர். இவற்றை அதிகம் இவர்கள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் பல்வேறு நிகழ்ச்சிகளினூடாகவே அறிந்து கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். இளைஞர்கள் தொலைக்காட்சியை நாடுவதற்கு அவரவர் தேவைக்கேற்றாற்போல் அது அமையும். அது நன்மை பயக்கக்கூடிய விடயமாகவும் இருக்கலாம். அதே நேரம் அது தீமை பயக்கக்கூடிய விடயமாகவும் இருக்கலாம்.

இத்தகைய தொலைக்காட்சி இளைஞர்களிடையே பயக்கக்கூடிய நன்மை தீமைகளைப் பின்வருமாறு ஆராயலாம்.

### தீமைகள் அதிகம்

தொலைக்காட்சியைப் பார்ப்பதால் இளைஞர்கள் பல்வேறு தீமையையே சந்திக்கின்றனர்.அவையாவன ஆபாசம், வன்முறை, கொலை, தற்கொலை, விபச்சாரம் போன்ற தீய செயல்களுக்கு வித்திடும் நிகழ்ச்சிகள் தான் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அதிகம் கவனம் செலுத்துகின்றன. நமது நேரத்தை தொலைக்காட்சி விழுங்கி விடுகின்றது. அறிவை மழுங்கடித்து விடுகின்றது. பண்பாடுகளையும் ஒழுக்கமாண்புகளையும் சிதைத்து விடுகின்றது. இன்றைய இளையஞர்கள் தொலைக்காட்சி புதைகுழியிலே சிதைத்து வருகின்றனர். நிகழ்ச்சியின் நடுவே யார் வந்தாலும் அவர்களை தொந்தரவாகவே பார்க்கும் மனோபாவம் எமது சமூகத்தில் ஆழமாக வேரூன்றியுள்ளது. முக்கியமான நிகழ்ச்சி ஓடிக்கொண்டு இருக்கும் போது உறவினர்களோ, நண்பர்களோ வந்துவிட்டால் அவர்கள் வேண்டா விருந்தாளியாகவே வரவேற்கப்படுவர். தொலைக்காட்சியை அணைத்து விடாமல் வந்தவர்களை உட்காரச் சொல்லி அவர்களிடம் கடமைக்காக ஓரிரு வார்த்தை பேசிவிட்டு மறுபடியும் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கவனம் செலுத்த ஆரம்பித்துவிடுவர். அடுத்த கட்ட விசாரிப்பு விருந்தோம்பல் எல்லாம் அடுத்தடுத்த விளம்பர இடைவேளையில்தான்.

அமெரிக்க ஆய்வின்படி உயர் நிலை வகுப்பை முடிக்கும் இளைஞன் ஒருவன் 16 ஆயிரம் மணி நேரம் முதல் 19 ஆயிரம் மணி நேரம் வரை சுமார் 2 ஆண்டுகள் தொலைக்காட்சி பார்த்த அனுபவம் பெற்றவனாக அப்பருவத்தை அடைகின்றான். இளைஞர்களின் வாழ்க்கையை நாசம் பண்ணுவதில் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் நெடுந்தொடர்களுக்கு பங்குண்டு.

குறிப்பாக யுவதிகள் நெடுந்தொடர்களுக்கு ஆட்படுகின்றனர். புள்ளி விவரங்களின்படி ஒளிபரப்பாகும் தொடர்களில் பெரும்பாலும் கள்ளக்காதல் கொள்வதையும், பெற்றோரை எதிர்த்து குடும்ப கௌரவத்தை காற்றில் பறக்க விட்டு அந்நியனோடு ஓடிப்போவதையும் படிக்கும் பருவத்தின் அவலங்களையும் நியாயப் படுத்துகின்றன.

இது மட்டுமன்றி மாமியார் – மருமகள் சண்டை பெரிதாக காட்டப்படுகின்றது. ஏன் மாமியாரைப் பெற்ற தாயாக மதிக்கின்ற மருமகள்களும் மருமகளை பெற்றெடுத்த பிள்ளையாக கருதும் மாமியார்களும் உலகத்தில் இல்லையா? பிறகேன் குடும்பச் சண்டையை மட்டுமே வளைத்தும் காட்ட வேண்டும் ? இதை யுவதிகள் மெய்மறந்து பார்ப்பது மகா மட்டமான ரசனை. இவை நெடுந் தொடர்கள் அல்ல. கடுந் தொடர்கள்.

விளம்பரங்களை பார்வையிடுவதால் இளைஞர்களிடையே ஏற்படும் தாக்கத்தை பின்வருமாறு பார்வையிடலாம். விளம்பரங்களில் அதிகம் இளைஞர்கள் சொகுசான வாகனங்களை பாவிப்பதாகவும், சொகுசான கைத்தொலைபேசிகளை வைத்திருப்பதாகவும் காட்டப்

தொடர்ச்சி▼

# தொலைக்காட்சியும்....

தொடர்ச்சி▲

படுகின்றது. அதனை பார்க்கும் இளைஞர்கள் தமது வீட்டிலும் இதனை வாங்கித் தருமாறு அவர்களுக்கு மிகுந்த சிரமம் கொடுக்கின்றனர்.

அப்படி பெற்றோர் வாங்கித்தாரத சூழலில் தற் கொலை செய்கின்ற நிலைமைக்கும் போய் விடுகின் றனர். இதற்கெல்லாம் காரணம் யார்? இந்த தொ(ல்) லைக் காட்சி தான்.

அனேகமான விளம்பரங்களின் பெண்களின் உள்ளாடை விளம்பரங்களை மிக மிக கவர்ச்சிகரமாகக் காட்டுகின்றது இந்த தொலைக்காட்சி. தொலைக் காட்சியில் ஒளிபரப்பாகும் செய்திகள் பெரும்பாலும் இளைஞர்களுக்கும் சமுதாயத்துக்கும் நன்மை தருவ தாகவே நாம் அனைவரும் எண்னிக் கொண்டிருக் கிறோம்.

**எதிர்பாராததை எதிர் பாருங்கள் என்பது போல பல தாக்கத்தை ஏற்படுத்துகிற அதிகம்**

தொலைக்காட்சியில் இளைஞர்கள் பாலியல் பலாத் காரத்தில் ஈடுபடுவதாகவும், போதைப் பொருள் கடத்து வதில் ஈடுபடுவதாகவுமே பல செய்திகள் சனல்களில் ஒளிபரப்பாகின்றன. இதன் மூலம் வேலையற்ற இளை ஞர்கள் போதைப் பொருள் கடத்துவதில் இறங்கி விடுகின்றனர்.

ஆகவே செய்திகளும் இளைஞர்களை தவறான பாதையில் இட்டுச்செல்கின்றன. பல யதர்த்தம் சார் நிகழ்வுகளிலும் இளைஞர்கள் மானபங்கப் படுத்தப் படுகின்றனர். உதாரணமாக சி தமிழில் ஒளிபரப்பாகிய சொல்வதெல்லாம் உண்மை என்ற நிகழ்ச்சியை எடுத்தால் அதில் ஒருத்தி இண்டு ஆண்களுடன் தொடர்பு வைத்திருப்பதாகவும் ஒரு ஆண் பல பெண் களுடன் தொடர்பு வைத்திருப்பதாகவும் தனி நபருடைய அந்தரங்க வாழ்க்கையை படம் போட்டு காட்டுகின்றனர். ஊருக்கே வெளிச்சம் பிடித்து காட்டுகின்றனர். அது மட்டுமன்றி விஜய் ரிவியில் ஒளிபரப்பாகிவரும் அதிக இளைஞர்களால் பார்க்கப்பட்டுவரும் இன்னொரு யதார்த்தம் சார் நிகழ்வான பிக் போஸ் நிகழ்வையும் குறிப்பிடலாம்.

அதிக இளைஞர்களை உள்ளெடுத்து அவர்களை ஆபாசமாகவும், இரட்டை வார்த்தை பிரயோகம் மேற் கொள்வதாகவும் அவர்களிடையே காதலை மூட்டுவ தாகவும் அமைகின்றது. இத்தகை நிகழ்ச்சிகள் அனைத்தும் இளைஞர்களை தீய பாதைக்குள் அடி எடுத்து வைக்கத் தூண்டுவனவாக அமைகின்றன. ரீதிய பாதைக்குள் இளைஞர்களைத் தீய வழியில் இட்டுச் செல்வதற்கு பாரிய பங்கை வழங்குவனவாகத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் சினிமா முதன்மை பெறுகின்றது.

கொலை, கற்பளிப்பு, போதை என்ற சகல தீய எண் ணங்களையும் விதைப்பனவாக இந்தத் தொலைக்காட்சி சினிமா காணப்படுகின்றது. சினிமா அதிகம் இளைஞர்களை போதைப் பொருள் கடத்துனராக காட்டுகின்றது. உதாரணமாக லோகேஸ் கனகராஜ் இயக்கிய அனேக படங்கள் இதனையே காட்டுகின்றன. நடிகர்களுக்கு அடிமையாகி அவர்களது விம்பத்திலேயே வாழும் இளைஞர்களுடம் உள்ளனர்.

திரைப்படங்களை நடிகர்களுக்கு அடிமையாகி அவர்களை போலவே நிஜத்திலும் வழ்கின்றனர். அவர்களால் தமது இயல்பான நிலைக்கு திரும்ப முடியாது. மன வருத்தத்தை தருகின்றது. அனோகமான இளைஞர்கள் வீதி விபத்தில் இறப்பதாக பல செய்திகள் கிடைத்துக் கொண்டே இருக்கின்றன. இதற்கான காரணம் கூட தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் திரைப்படங்களோ. அதில் நடிக்கும் நடிகர்கள் மோட்டார் வாகனம், காரில் மிக வேகமாக பயணம் செய்வது போல காட்டப்படுகின்றது. இதனைப் பார்த்து இளை ஞர்கள வேகமாகச் சென்று தமது உயிரை மாய்த்துக் கொள்கின்றனர்.

தொலைக்காட்சி ஒன்றில் ஒளிபரப்பாகிய ஒரு நிகழ்ச்சியில் ஒரு இளைஞன் தான் அர்ஜீனரு வில்லு பாட்டு கேட்டுத்தான் அதிகம் ஆட்டோ ஓடுவேன். அப்போது எனது ஆட்டோ என்னையும் தாண்டி மிக வேகமாக செல்லும் என்று கூறினான். இதெல்லாம் சிரிக்க வேண்டிய ண்டிய விடயம் அல்ல சிந்திக்க வேண்டிய விடயமே. அவ்வளவுக்கு இளைஞர்கள் திரைப்படங்களில் மூழ்கியிருக்கின்றனார். அது மட்டுமன்றி படம், பாடல்களில் இளைஞர்களை 10 கொச்சைப் படுத்துவதாகவும் ஆபாசமாகவும் காட்டப் படுகின்றது. பல இளைஞர்கள் போதைக்கு அடிமை யாவதற்கு கூட இது ஆதாரமாக அமைந்துள்ளது. படையப்பா, மக்காத்தா, மாஸ்டர் போன்ற படங்களில் நடிகர்கள் அதிகம் போதைப் பொருள் பாவிப்பதால் அதனைப் பார்க்கும் இளைஞர்களும் இப்பழக் கத்துக்கு அடிமையாகின்றனர். நமது கலாசாரத்தை அழிப்பதாக வும் திரைப்படங்கள் காண்பிக்கப்படுகின்றன. அதிகம் இளைஞர்களின் ஆடை அணிகலன்கள் வரை திரைப்படங்கள் மாற்றியுள்ளன. அது மாத்திரமல்லாது பல சாவுகளுக்கும் காரணமாகின்றது. பல இளைஞர்கள் தமக்கு பிடித்த நடிகருக்கோ நடிகைக்கோ கட் அவுட் வைத்து பாலாபிசேகம் பண்ணி எத்தனையோ பேர் அவ் உயரத்தில் இருந்து விழுந்து இறந்து போன செய்தியும் உண்டு.

இத்தகைய இளைஞர்களுடைய வாழ்க்கையை தீய பாதையில் இட்டுச் செல்வதில் சினிமாக்கும் ஒரு முக்கிய பங்குண்டு. மோதலுக்கு தள்ளுவதாகும் அமைகின்றது. உதாரணமாக தீனா படம் வந்த வேளை யாழ்ப்பாணத்தில் தீனா குழு வந்து வாள் வெட்டு குழு வாக மாறியது. துற்போது பல குழுக்கள் காணப் படுகின்றன. அதிகம் இளைஞர்களே இதற்கு அடிமைப் பட்டுள்ளனர்.

இதனை விட அதிகம் தொலைக்காட்சி பார்ப்பதால் தலைவலி, கண்பார்வை குறைபாடு போன்ற பிரச்சி னைகளும் ஏற்படுகின்றன. ஆதலால் இளம் வயதி லேயே கண்ணாடியை அணிகின்ற வழக்கமும் உண் டாகின்றது. அதுமட்டுமல்லாது தொலைக்காட்சியை தொடர்ந்து பார்த்து கொண்டிருக்கும் போது உடற்பருமன் அதிகரிப்பு போன்ற பல நோய்கள் மற்றும் பல பிரச்சினைகள் தொலைக்காட்சியினூடாக ஏற்படுகின்றது.

**நன்மைகள்**

தொலைக்காட்சியினால் ஒரு பயனும் கிடையாது என்று அடியோடு மறுப்பதிற்கில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக சில நல்ல நிகழ்ச்சிகளும் காணமுடிகின்றது. டிஸ்கேவேரி அனிமல் பிளானட் போன்ற சேனல்களில் இறைவனின் படைப்பாற்றலை கண்டு வியக்க நிற்கும் நிகழ்ச்சிகள் சில அவ்வவ்போது வருகின்றன. பெரும்பான்மை சேனல்களில் காலை வேளையில் மிகச்சில பயனுள்ள நிகழ்வுகள் வழங்கப் படுகின்றன. முழுக்க முழுக்க பயனுள்ள நிகழ்வுகளை ஒளிபரப்பும் தொலைக்காட்சிகளை நாம் வரவேற்பது அரிது. அதிகம் 11 இளைஞர்களினுடைய அறிவுக்குத் தீனி போடுவதாகவும் இந்த தொலைக்காட்சி அமை கின்றது. உதாரணமாக யாழ்ப்பாணத்தில் ஒளிபரப்பாகும் " டான் டிவி" யை உதாரணமாக எடுத்துக்கொண்டால் அதிக பல பட்டிமன்ற விவாதங்கள் மற்றும் கேள்விக்கு ஆயிரம் ஆகிய நிகழ்ச்சிகளை எடுத்துக்கொண்டால் இவை இளைஞர்களது அறிவை வளர்ப்பதாகவும் அமைகின்றன

இந்திய சேனல்களை எடுத்துக்கொண்டால் அதில் ஒளிபரப்பாகும் "நீயா நானா","தமிழா தமிழா" ஆகிய நிகழ்ச்சிகள் கூட அறிவை பெறும் களஞ்சியமாக காணப்படுகின்றன. அது மட்டுமல்லாது நமது இலங் கையிலிருந்து தொலைக்காட்சியில் வேலை புரிந்த

தொடர்ச்சி▼

# தொலைக்காட்சியும்....

**தொடர்ச்சி▲**

இளைஞர்களின் திறமை உலகெங்கும் அறியப்பட்டது. உதாரணமாக தொலைக்காட்சியை ஒன்றில் செய்தி வாசித்து கொண்டிருந்த "லாஸ்லியா" மற்றும் "ஜனனி" ஆகியோர் சினிமா செல்வதற்கு வழி சமைத்துக் கொடுத்தது கூட இந்த தொலைக்காட்சி தான். இத்தகைய நல்ல விடயங்களை கூட தொலைக்காட்சிகள் பெற்றுத் தருகின்றன.

சாதாரணமாகவே இளைஞர்களாகிய நாம் மன உழைச்சலுக்கு ஆளாகி இருக்கிறோம். அதிகம் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு பிரச்சினைகள் நாளாந்தம் சுற்றிச் சுற்றி வரும். இத்தகைய பிரச்சினைகள் சூழ்ந்த உலகில் இருக்கும் போது தொலைக் காட்சியில் ஒலிபரப்பாகின்ற பாடல்களையோ அவ்லது நகைச்சுவைக் காட்சிகளையோ பார்க்கும் போது அவை மன நிறைவையோ அல்லது அவ் மன உளைச்சலில் இருந்து விடுபடுவதற்கான ஒரு இலத்திரனியல் மருந்தாகவோ அமைகின்றது.

கொரோனா காலத்தை எடுத்துக் கொண்டால் கல்வி கற்பதற்கான சூழ்நிலை இல்லாது இருந்தது, அப்போது உயர்தர மாணவர்களுக்கான விசேட கல்விகளை கல்வி சேனல் ஊடாக ஒலிபரப்பியமையும் மாணவர்களின் படிப்புக்கு வெற்றிப் படியாக அமைந்து யுவதிகளுக்கான அழகுக்குறிப்புக்கள், சமையல் குறிப்புக்கள் போன்ற விடயங்களை அறிந்து பெற்றுக் கொள்வதற்கான அறிவியல் பெட்டகமாகவும் கொலைக்காட்சி செயற்பட்டு வருகின்றது.

தொலைக்காட்சியூடாக தொலைந்து போகும் கலாசாரம் அதே தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும். சில திரைப்படங்களினூடாக மீள் உருவாக்கம். செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டும் வருகின்றது. செய்தியை எடுத்துக் கொண்டால் தினம் தினம் நாட்டு நடப்பு மற்றும் உலகத்தில் நடை பெறும் அனைத்துச் செய்திகளையும் அறியக் கூடிய வாய்ப்பையும் இத்தொலைக் காட்சி தந்துதவுகின்றது.

முடிவில், தொலைக்காட்சி இளம் நட்சத்திரங்கள் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகிறது, அவர்களின் தொழில் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையை வடிவமைக்கிறது. இது தெரிவுநிலை மற்றும் வெற்றிக்கான அபரிமிதமான வாய்ப்புகளை வழங்கும் அதே வேளையில், தீவிரமான பொது ஆய்வு மற்றும் பொது உருவத்தை பராமரிப்பதில் உள்ள அழுத்தங்கள் போன்ற சவால்களுடன் இது வருகிறது. இளம் கலைஞர்கள் இந்த சிக்கல்களை கவனமாக வழிநடத்த வேண்டும், அவர்களின் தொழில்முறை வளர்ச்சியை மன மற்றும் உணர்ச்சி நல்வாழ்வுடன் சமநிலைப்படுத்த வேண்டும். பொழுதுபோக்குத் துறை தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருவதால், அடுத்த தலைமுறை நட்சத்திரங்களை வடிவமைப்பதில் தொலைக்காட்சியின் பங்கு முக்கியமாக இருக்கும். கவனத்தை ஈர்க்கும் நபர்களுக்கு ஆபத்துகள் மற்றும் வெகுமதிகள் இரண்டையும் வழங்குகிறது.



# மன்னார் ஜிம்ரோன் நகர் கிராமத்தில் உலர் உணவு பொதிகள் கையளிப்பு

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வந்த கடும் மழை காரணமாக பாதிக்கப்பட்டு, தற்காலிக நலன்புரி நிலையங்களில் வசித்து, மீண்டும் தமது வீடுகளுக்குச் சென்ற நிலையில் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஜிம் ரோன் நகர் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 200 குடும்பங்களுக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை(3) உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மன்னார் நலன்புரிச்சங்கம் ஐக்கிய இராச்சியத்தின் தலைவர் ஜேம்ஸ் பத்திநாதனின் ஏற்பாட்டில் மன்னார் பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்பில் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

மன்னார் பிரதேசச் செயலாளர் எம்.பிரதீப் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன், மன்னார் நலன்புரிச் சங்கம் ஐக்கிய இராச்சியத்தின் மன்னார் மாவட்ட தலைவரும் வடமாகாண முன்னாள் பிரதம செயலாளருமான பத்திநாதன், மன்னார்



மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் கே.திலீபன், உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி எஸ். திவாகரி ஆகியோர் கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்குத் தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவு பொதிகளை வழங்கினர்.

# நாடாளுமன்ற வளாகத்தில் ராகுல் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பிக்கள் நூதன ஆர்ப்பாட்டம்




அதானி விவகாரம் தொடர்பாக நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணைக்கு உத்தரவிட வலியுறுத்தி மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்டோர் நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதானி கிரீன் நிறுவனம் மின்சார விநியோகத்துக்கான ஆர்டரை பெறுவதற்காக 4 மாநில அரசுகளுக்கு லஞ்சம் கொடுத்ததாக அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்கு தொடரப் பட்டுள்ளது. இதையடுத்து, இந்த விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றக் கூட்டுக் குழு விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்பதை காங்கிரஸ் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

இந்நிலையில், நாடாளுமன்றக் குளிர்கால கூட்டத் தொடரின் 9 ஆம் நாளான இன்று, நாடாளுமன்றத்துக்கு வந்த ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பிக்கள், நாடாளுமன்ற வளாகத்தில் இந்த விவகாரத்தை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, அவர்கள் "மோடியும் அதானியும் ஒன்று" என பொறிக்கப்பட்ட ஆடையை அணிந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## 'தி.மு.க. அரசை வீட்டுக்கு அனுப்புவோம்'

# ஜெயலலிதா நினைவு நாளில் அ.தி.மு.கவினர் உறுதிமொழி



"குடும்ப ஆட்சியில் தந்தை, மகன், மருமகன் அதிகாரம் செலுத்தும், போலி திராவிட மாடலின் பொய் முகத்தை அம்பலப்படுத்துவோம்."

– இவ்வாறு மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் நினைவு நாளையொட்டி அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி உள்பட அக்கட்சியினர் உறுதிமொழி ஏற்றனர்.

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 8 ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று அனுசரிக்கப்படுகிறது. இந்நிலையில் சென்னை மெரினா கடற்கரையில் உள்ள ஜெயலலிதாவின் நினைவிடத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மலர் வளையம் வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இதனிடையே முன்னாள் முதல்வர், ஜெயலலிதா நினைவு தினத்தை யொட்டி அவர் உறுதிமொழிகளை அறிக்கையாக வெளியிட்டுள்ளார். அந்த உறுதி மொழியில்,

"தீயசக்தியை விரட்டியடிக்க, குடும்ப ஆட்சியை வீட்டுக்கு அனுப்பிட கழகத்தை நிறுவிய நம் தலைவர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் வழியில் அயராது உழைப்போம். கழகம் காக்க, கர்ஜிக்கும் சிங்கமெனத் திகழ்ந்த புரட்சித் தலைவி அம்மாவின் வழியில் தி.மு.க. ஆட்சியை, வீட்டுக்கு அனுப்பிட, விண்ணை முட்டும் வீரர்களின், ஆர்ப்பரிப்பைப் பாரீர். பொய்யான வாக்குறுதிகளைத் தந்து, மக்களை ஏமாற்றி வரும், பொம்மை முதல்வர் ஆட்சிக்கு, முடிவு கட்டுவோம்.

குடும்ப ஆட்சியில் தந்தை முதல்வர், மகன் துணை முதல்வர், மருமகன் அதிகாரம் செலுத்தும், போலி திராவிட மாதிரியின் பொய் முகத்தை அம்பலப் படுத்துவோம். மக்கள் விரோத தி.மு.க. ஆட்சியிலே, குடிநீர் கட்டண உயர்வு கழிவு நீர் வரி உயர்வு, சொத்து வரி உயர்வு, பால் கட்டண உயர்வு, மின் கட்டண உயர்வு, பத்திரப் பதிவில் வழி காட்டி மதிப்பு உயர்வு, பேருந்து கட்டண மறைமுக உயர்வு, ஏழை, எளிய மக்களின் வயிற்றில் அடிக்கும், ஈரமில்லாத, இரக்கமில்லாத தந்திர மாடல் ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவோம்.

தி.மு.க. ஆட்சியிலே, தொடர் கொலை, கொள்ளை, வழிப்பறிச் சம்பவங்களால் சட்டம்-ஒழுங்கு சீர்கெட்டுப் போச்சு. கள்ளச் சாராய மரணங்களால், ஏழை, எளிய மக்களின் குடும்பமே நிர்கதியாய் ஆச்சு. எங்கும் கஞ்சா போதைகளால், தமிழ் நாடே தத்தளித்துப் போச்சு. விடியா திமுக ஆட்சி தேவையா? என்று மக்கள் மனதில் எண்ணம் வந்திருக்கு. மக்கள் விரோத தி.மு.க. அரசை, வீட்டுக்கு அனுப்பும் வரை ஓயமாட்டோம்.

தி.மு.க. ஆட்சியில், குற்றவாளிகளுக்கு துளியும் பயமில்லை, தொடர் குற்றங்கள், இந்த ஆட்சியில் தொடர்கிறது. இங்கு தமிழகத்தில் ஆட்சி இருக்கிறதா? இல்லையா? என்கிற கேள்வியை மக்கள் எழுப்பி வருகிறார்கள். தமிழ் நாட்டை, குற்றவாளிகளின் சொர்க்க பூமியாக மாற்றியிருக்கும் தி.மு.க. அரசே இராஜினாமா செய்.

அ.தி.மு.க. ஆட்சியிலே சிறப்பான திட்டங்கள் மக்களுக்கு செழிப்பான திட்டங்கள் ஏழைகள் பசியாற, அம்மா உணவகங்கள் ஏழைகள் நலம் பெறவே, அம்மா மருந்தகங்கள் மாணவர்கள் பயன்பெறவே, மடிக் கணினி திட்டங்கள் தாலிக்குத் தங்கம் என்று, தாய்க்குலம் புகழும் திட்டங்கள் இத்திட்டங்களை நிறுத்திவிட்டால், ஜெயலலிதாவின் புகழை, மறைத்துவிடலாம் என்று தீய சக்தியாளர்கள் நினைக்கின்றார்கள். அவர்களின் கொட்டத்தை அடக்கிடுவோம்.

வருகின்ற சட்டமன்றத் தேர்தல் களத்தில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் வழியில் நின்று, வென்று காட்டுவோம். தமிழகத்தில் கழக ஆட்சியை மீண்டும் அமைத்திடுவோம்." என்று குறிப்பிடப்பட்டுள்ளது.





# 24 மணித்தியாலங்களில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 30 பேர் பலி

பாலஸ்தீனியர்கள் மீது கடந்த 24 மணித்தியாலங்களில் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் 30 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என காசாவின் சுகாதார அமைச்சு நேற்று மாலை அறிவித்தது.

அத்துடன், மேற்படி தாக்குதலில் 84 பேர் காயமடைந்துள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

காசாவின் மத்திய பகுதியில் உள்ள அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் மேற்கொண்ட ஆளில்லா விமானத்தாக்குதலில் 4 சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, காசாவின் வட பகுதியில் அமைந்துள்ள மருத்துவமனையில் நூற்றுக்கும் மேற்பட்ட நோயாளிகள் உயிரிழக்கும் நிலையில் இருக்கின்றனர் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி மருத்துவமனையை இலக்கு வைத்து இஸ்ரேலியப் படைகள் தாக்குதல்களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# மிச்செல் பார்னியர் தலைமையிலான பிரான்ஸ் அரசாங்கம் கவிழ்ந்தது





பிரான்ஸ் பிரதமர் மிச்செல் பார்னியருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் அந்த நாட்டு நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டு பிரான்ஸ் அரசாங்கம் கவிழ்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் பெருமளவான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

சர்ச்சைக்குரிய வகையில் தமது சிறப்பு அதிகாரங்களைப் பயன்படுத்தி பாதீட்டுத் திட்டத்தை வாக்கெடுப்பின்றி நிறைவேற்றுவதற்கு அவர் முயற்சித்தமையை அடுத்து எதிர்க்கட்சியினரால் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை முன்வைக்கப்பட்டது.

இதன்படி, பிரான்சில் 1962 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் ஊடாக ஆட்சி கவிழ்வது இதுவே முதன்முறையாகும்.

இந்தநிலைமை பிரான்சின் அரசியல் உறுதியற்ற தன்மையை மேலும் அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி நம்பிக்கையில்லா பிரேரணையை நிறைவேற்றுவதற்கு 288 வாக்குகள் தேவைப்பட்ட நிலையில் 331 உறுப்பினர்கள் அதற்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.







பக்கங்கள் 03
கனடா முரசு
புதன்கிழமை 04/12/2024

## மத்திய ஒன்றாரியோவில் பாடசாலை பஸ்கள் ரத்து

மத்திய ஒன்றாரியோ பகுதியில் பாடசாலை பஸ்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

சீரற்ற காலநிலை காரணமாக இவ்வாறு பாடசாலை பஸ்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

02





# 11 மொழிகளில் வெளியிடப்பட்ட உலகளாவிய எச்சரிக்கை விளம்பரம்

**கனேடிய நாட்டில் இனி புகலிடக் கோரிக்கை பெறுவது என்பது எளிதான விடயம் அல்ல என அந்நாட்டு அரசாங்கம் உலகளாவிய எச்சரிக்கை விளம்பரம் ஒன்றை விடுத்துள்ளது.**

**இதன்படி, சுமார் 178,662 டொலர்கள் செலவில் தமிழ், இந்தி, உருது, ஸ்பேனிஷ் உட்பட 11 மொழிகளில் இந்த எச்சரிக்கை விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது.**

மேற்படி நடவடிக்கை கனேடிய மக்களிடையே செல்வாக்கு குறைந்து வரும் பிரதமர் ஜஸ்டின் ட்ருடோ அரசின், அரசியல் தந்திரம் என ஒரு சில தரப்புகளில் இருந்து விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இந்த விளம்பரத்தில், கனடாவில் இனி புகலிடம் கோருவது எளிதல்ல. தகுதி பெற கடுமையான வழிமுறைகள் உள்ளன. முடிவெடுக்கும் முன்னர் அவை தொடர்பில் நன்கு தெரிந்து கொள்ளுங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது

இதேவேளை, புலம்பெயர் மக்களுக்கு வாய்ப்புக்களை அதிகம் வழங்கிவரும் கனேடிய அரசு, தற்போது அந்த எண்ணிக்கையை குறைத்துள்ளது.





# தவறுதலாக கனடிய எல்லையை கடந்த நபர் எல்லை பாதுகாப்பு அதிகாரிகளால் கைது

தவறுதலாக கனடிய எல்லையையே கடந்த நபரை எல்லை பாதுகாப்பு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

அமெரிக்காவை சேர்ந்த மேற்படி நபர் தற்செயலாக கனடிய எல்லை பகுதிக்குள் பிரவேசித்தார் என தெரிவிக்கப்படுகிறது.

27 வயதான ஹொண்டுராஸ் நாட்டின் பிரஜை ஒருவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்காவின் குற்றவாளி கும்பல்களில் ஒன்றான மாறா செல்வட்ருச்சா குற்றவாளி கும்பலை தேர்ந்த நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்க கனடிய எல்லை பகுதியில் இவ்வாறு பல்வேறு சந்தர்ப்பங்களில் நபர்கள் தற்செயலாக எல்லை பகுதிக்குள் பிரவேசிக்கும் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாலியல் குற்றச்செயலில் ஈடுபட்ட பெண் பொலிஸ் உத்தியோகத்தர்



கனடாவின் ஆல்பர்ட்டா மாகாணத்தில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பாலியல் குற்றச்செயலில் ஈடுபட்டுள்ளார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மேற்படி பெண் பொலிஸ் உத்தியோகத்தர் மீது இரண்டு பாலியல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

கடந்த 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மூன்றாம் திகதி இந்த சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

ஹோட்டல் அறை ஒன்றில் தங்கி இருந்த சிலர் இந்த முறைப்பாட்டை செய்துள்ளனர்.

ஹோட்டலில் இருந்தவர்கள் மீது இந்த பெண் பொலிஸ் உத்தியோகத்தர் பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்களை மேற்கொண்டார் என தெரிவிக்கப்படுகிறது.

கொன்ஸ்டபில் பிரிட்ஜெட் மோர்லா என்ற பெண் பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக இந்த பாலியல் குற்றச் செயல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

# ஒன்றாரியோவில் அனைவருக்கும் குடும்ப நல மருத்துவர் சேவை




ஒன்றாறியோ மாகாணத்தில் அனைத்து பிரஜைகளுக்கும் குடும்ப நல மருத்துவரின் சேவையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

மாகாணத்தின் லிபரல் கட்சித் தலைவி வோனி குரோம்பே இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அனைவருக்கும் ஒரு குடும்ப நல மருத்துவரின் சேவையை வழங்குவதற்கான திட்டத்தை முன்மொழிய உள்ளதாக அவர் தெரிவிக்கின்றார்.

கனடாவில் பொதுவாகவே குடும்ப நல மருத்துவர்களின் சேவையைப் பெற்றுக் கொள்வது மிகவும் சவால் மிக்கதாக காணப்படுகின்றது.

அந்த வகையில் ஒன்றாரியோவில் இந்த நிலைமை நெருக்கடியாக காணப்படுகின்றது என என தெரிவித்துள்ளார்.

மாகாணத்தில் முன்கூட்டியே தேர்தல் நடைபெறக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் சுகாதார நலன் தொடர்பிலான தனது திட்டத்தை கிராம்பே வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, குடும்ப நல மருத்துவர்களை வைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக மாகாண முதல்வர் டக் போர்ட் தெரிவித்துள்ளார் .

## மத்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில பகுதிகளில் 30 சென்றி மீற்றர் வரையில் பனிப்பொழிவு ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பல வீதிகளில் போக்குவரத்து செய்ய முடியாத நிலை காணப்படுவதனால் இவ்வாறு பஸ்கள் சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

கனடிய சுற்றாடல் திணைக்களமும் போக்குவரத்து தொடர்பிலான எச்சரிக்கை வெளியிட்டு இருந்தது.

மீபோர்ட், தோர்ன்பரி, மார்க்டேல் மற்றும் பிளஸர்டன் போன்ற பகுதிகளின் பஸ் சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இதனால் மாணவர்கள் அசௌகரியங்களை எதிர் நோக்க நேரிட்டுள்ளது.

குளிர் காலம் ஆரம்பமாகியுள்ள நிலையில் கடும் பனிப்பொழிவு பதிவாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# கனடாவில் உணவு வங்கிகளை நாடுவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

கனடாவில், கனடாவில் உணவு வங்கிகளை நாடுவோர் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ள நிலையில், ஒரே மாதத்தில் 2 மில்லியன் முறை உணவு வங்கிகளை மக்கள் நாடியுள்ளனர் என தெரியவந்துள்ளது.

2024ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தில் மட்டும், 2 மில்லியன் மக்கள் உணவு வங்கிகளை நாடியுள்ளதாக Food Banks Canada அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த எண்ணிக்கை, முந்தைய ஆண்டைவிட ஆறு சதவிகிதமும், 2019ஐ விட 90 சதவிகிதமும் அதிகமாகும்.

மாதம்தோறும் உணவு வங்கிகளை பயன்படுத்தும் 12,000 பேரில் 50 சதவிகிதம் பேர் முழு நேர வேலை செய்பவர்கள் ஆவர். அத்துடன், 60 சதவிகிதத்துக்கும் அதிகமானோர் நன்கு கற்றவர்கள், வேலையிலிருப்பவர்கள்.

அதாவது, வேலைக்குச் சென்றும் அவர்களால் குடும்பத்தின் செலவுகளை சமாளிக்க முடியாத நிலை நாட்டில் காணப்படுகிறது.

ஆக, வேலையிலிருப்பவர்கள் கூட மீண்டும் மீண்டும் மாதம்தோறும் உணவு வங்கிகளை நாடிவருவதால், அவர்கள் அனைவருக்கும் உணவளிக்க இயலாத நிலை தொண்டு நிறுவனங்களுக்கு ஏற்பட்டுள்ளது.

30 சதவிகிதத்துக்கும் அதிகமான உணவு வங்கிகளில் உணவுப்பொருள்கள் இல்லாத நிலை உருவாகிவிடுகிறது.

இப்படி கஷ்டப்படும் மக்களின் தேவைகளை சந்திக்கவேண்டியது அரசாங்கம், ஆனால், அந்த சுமை முழுவதும் உணவு வங்கிகளில் தோள்களில் விழுந்துள்ளது.

இதனால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல்வாதிகளை நேருக்கு நேர் பார்க்கும்போது எனக்குக் கோபம் வருகிறது என்கிறார் உணவு வங்கி ஒன்றை நடத்தும் Matt Noble.

நாட்டில் என்ன நடக்கிறது, மக்களுக்கு எவ்வளவு தேவைகள் உள்ளன என்பதை இந்த அரசியல்வாதிகளிடம் சொன்னால், பதிலுக்கு முதுகை தட்டிக்கொடுத்து, நீங்கள் செய்யும் சேவைக்காக நன்றி என்று மட்டும் கூறிச்சென்றுவிடுகிறார்கள் என்கிறார் Matt Noble.

உணவு வங்கிகள் அமைக்கப்பட்டதற்கான நோக்கமே மாறி, மக்களுக்கு மாதா மாதம், ஆண்டு முழுவதும் உணவளிக்கும் அமைப்புகளாக அவை மாறிவிட்டன.

இதற்காக உணவு வங்கிகள் உருவாக்கப்படவில்லை, மக்களுடைய தேவைகளை அரசு சந்தித்து, உணவு வங்கிகளே இல்லாத ஒரு நிலை உருவாகவேண்டும் என்கிறார் மற்றொரு உணவு வங்கியின் தலைவரான Josh Smee.



